## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி எழுதியுள்ள ‘தேசிய கல்விக் கொள்கை–2020 எனும் மத யானை நூல்’

# கல்வி உரிமைக்கான ஜனநாயகப் போராட்டத்தின் அறிவாயுதம்: முதலமைச்சர் தலைமையில் ஓரணியில் நின்று வீழ்த்துவோம்!

## நூல் வெளியீட்டு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க வரவேற்புரை!

**சென்னை, மே 18– சென்னையில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி எழுதியுள்ள, ‘தேசிய கல்விக் கொள்கை–2020 எனும் மதயானை’ நூல் வெளியீட்டு விழா நேற்று மாலை நடைபெற்றது.**

முதலமைச்சர் நூலை வெளியிட, மத்திய பிரதேச முன்னாள் முதலமைச்சர் திக்விஜய் சிங், முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி கோபால கவுடா இஸ்ரோ முன்னாள் இயக்குநர் மயில்சாமி ஆகியோர் அதனைப் பெற்றுக் கொண்டனர்.

முன்னதாக, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு வரவேற்புரை ஆற்றினார்.

அப்போது அவர், “இப்புத்தகம், நம் கல்வி உரிமைக்கான ஜனநாயகப் போராட்டத்திற்கு வலுசேர்க்கும் முக்கிய அறிவாயுதம். மும்மொழிக் கல்வித் திட்டம் - கல்வியை காவிமயமாக்கும் சதி - பிற்படுத்தப்பட்ட– ஒடுக்கப்பட்ட மாணவர்களை கல்வியில் இருந்து வெளியேற்றும் சூழ்ச்சி... இதுவே புதிய கல்விக் கொள்கை. இந்த மதயானையை நமது முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஓரணியில் நின்று வீழ்த்துவோம்” என்று அவர் குறிப்பிட்டார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வரவேற்புரை வருமாறு:

இந்தச் சிறப்பான விழாவிற்குத் தலைமை ஏற்றுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர், அன்பில் தர்மலிங்கம் தாத்தா, நம் முதலமைச்சர் அவர்கள், அன்பில் பொய்யாமொழி மாமா இந்தக் கொள்கை நட்பின் தொடர்ச்சியாக, என்னோடு எந்நாளும் கைகோர்த்து நிற்கின்ற, எனது அன்பு நண்பன், மாண்புமிகு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி எழுதிய `தேசிய கல்விக் கொள்கை–2020 எனும் மதயானை’ நூல் வெளியீட்டு விழாவில் வரவேற்புரை ஆற்ற வாய்ப்பளித்தமைக்காக, அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.




### புத்தக ஆசிரியர்

மாவட்ட கழகச் செயலாளர், சிறந்த சட்டமன்ற உறுப்பினர், சிறந்த அமைச்சர் என எண்ணற்றப் பணிகளைத் திறம்படச் செய்து வரும், என் நண்பர் மகேஷ் அவர்கள் இன்றைக்கு ஒரு புத்தக ஆசிரியராகவும், உயர்ந்து நிற்கின்றார். மிகச் சரியான நேரத்தில், மிக முக்கியமான ஒரு புத்தகத்தை அவர் கொண்டு வந்திருக்கிறார், அவருக்கு அனைவரின் சார்பாக, எனது பாராட்டுக்கள், வாழ்த்துக்கள்.

கல்வியைக் காவிமயமாக்கத் துடிக்கின்ற பாசிஸ்டுகளை, நேருக்கு நேர் நின்று எதிர்க்கின்ற ஒரு கால கட்டத்தில் நம் கல்வித்துறை இன்று இருக்கிறது. இந்த சவாலான சூழ்நிலை நம் மாண்புமிகு முதலமைச்சரின் வழிகாட்டுதலுடன், சாதனைக்கான வாய்ப்பாக மாற்றி வரும், எனது நண்பர் அன்பில் மகேஷ் அவர்களுக்கு, நம் வாழ்த்துக்கள், பாராட்டுக்கள்.

புதிய கல்விக் கொள்கை 2020 எனும் மதயானை தமிழ்நாட்டிற்குள் புகுந்து, கல்வியில் சிறந்த தமிழ்நாட்டை நாசப்படுத்தி விடக்கூடாது என்று, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், 2016–இல் எச்சரித்தார்கள். கலைஞர் அவர்கள் பயன்படுத்திய, அதே வார்த்தையைத் தலைப்பாக்கி, இன்றைக்கு மகேஷ் அவர்கள் இந்தப் புத்தகத்தைக் கொண்டு வந்திருக்கிறார்.

### சவாலைக் காணலாம்

இந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலும், நண்பர் மகேஷ் அவர்களின் உழைப்பைக் காண முடிகிறது, சவாலையும் காண முடிகிறது. பொதுவாக, எந்த ஒரு விஷயத்தை எடுத்துக்கொண்டாலும், அதில் சாதக பாதக விஷயங்கள் இருக்கும். ஆனால், பாதகத்தை மட்டுமே கொண்ட ஒன்று என்றால், அது இந்த புதிய கல்விக் கொள்கை மட்டும்தான்.

புதிய கல்விக் கொள்கை எங்கு தொடங்கியது, அது எப்படிக் காவிமயமானது, இதன் உருவாக்கத்தில் ஆர்.எஸ்.எஸ் எப்படி ஊடுருவியது! இப்படிப் பல்வேறு விஷயங்களை, இந்த நூலில் ஆதாரங்களுடனும், புள்ளிவிவரங்களோடும் விவரித்திருக்கிறார் நண்பர் மகேஷ் அவர்கள்.

### குலக்கல்வித் திட்டம்

மும்மொழிக் கொள்கை என்ற பெயரில், சமஸ்கிருதத்தையும், இந்தியையும் திணிக்கின்ற சூழ்ச்சிக்கான காரணத்தை இந்த நூல் அம்பலப்படுத்துகிறது. ‘விஸ்வகர்மா’ என்ற பெயரில் குலக்கல்வித் திட்டத்தை நுழைக்கும் ஆர்.எஸ்.எஸ்–இன் தந்திரத்தை நாம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

அதுமட்டுமல்ல மகளிர், திருநர், மாற்றுத்திறனாளிகளின் கல்விக்காக, எந்த ஒரு சிறப்பு அம்சமும் இந்தப் புதிய கல்விக் கொள்கையில் இடம்பெறவில்லை. மூன்றாம் வகுப்பு, ஐந்தாம் வகுப்பு, எட்டாம் வகுப்பில் பொதுத் தேர்வு. ஒன்பதாம் வகுப்பு முதல், பன்னிரண்டாம் வகுப்பு வரை செமஸ்டர் தேர்வு என்ற பெயரில், 40 தேர்வுகள். அடுத்து கல்லூரிக்குச் செல்லும் போது தனியாக நுழைவுத் தேர்வு என்று இந்தப் புதிய கல்விக் கொள்கை சொல்கிறது. மொத்தத்தில் யாரெல்லாம் படித்து மேலே வர வேண்டும் என்பதற்குப் பதிலாக, யாரெல்லாம் படிக்கக்கூடாது என்று செய்யப்பட்ட முயற்சியே புதிய கல்விக் கொள்கை.

### யானைக்கு மதம் பிடித்தால்...

யானைக்கு மதம் பிடித்தால், அது எவ்வளவு ஆபத்து என்பது நம் அனைவருக்கும் தெரியும். குட்டியிலிருந்து அந்த யானையை வளர்த்து, பராமரித்து வந்த பாகனைக் கூட அது தூக்கிப்போட்டு மிதித்து விடும். ஏனென்றால், மதம் பிடித்த யானைக்கு, வெறி மட்டும் இருக்குமே தவிர, யாரை தாக்குகிறோம், எதற்காகத் தாக்குகிறோம் என்ற அறிவு அதற்கு இருக்காது.

தேசிய கல்விக் கொள்கை என்பது, நாடு முழுவதும் நம் பிள்ளைகளின் படிப்பை, எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற ஒரு ஆவணம். அப்படிப்பட்ட கல்விக் கொள்கைக்கு மதம் பிடித்தால், நம் நாட்டின் எதிர்காலமே சிதைந்து விடும். இந்த விவரம் புரியாமல் இன்றும் சிலர் அதை ஆதரிக்கிறார்கள். அவர்கள் வீட்டுப் பிள்ளைகளின் கல்வியையும் இந்த மதம் பிடித்த கல்விக் கொள்கை, அழித்து விடும் என்பதை, விரைவில் அவர்கள் உணர வேண்டும்.

ஆகவேதான் இதை வீழ்த்துவதற்கான போரில், நம் முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிலேயே முன்வரிசையில் நின்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். நம் குழந்தைகளின் எதிர்காலத்தை எழுதுகின்ற சாக்பீஸை உண்மையில் யார் கைகளில் கொடுப்பது, ஜனநாயகத்தின் கைகளிலா அல்லது சர்வாதிகாரத்தின் கைகளிலா? என்று இந்தப் புத்தகத்தில் நண்பர் அன்பில் மகேஷ் எழுப்பியுள்ள கேள்வியை நாம் அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

‘என்.இ.பி.’ என்பது இந்தியாவைப் பின்னோக்கி இழுத்துச் செல்வதற்கான வேதகால விஷம்’ என்பதை இந்தப் புத்தகத்தில் அவர் புரியவைக்கிறார். அந்த விஷத்தை முறியடிக்க வேண்டிய கடமை நம் அனைவருக்கும் இருக்கிறது.

### மதயானை

அதற்கு கல்வியை மீண்டும், மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வந்தே ஆக வேண்டும். இதனை சாத்தியமாக்க, நாம் அனைவரும் இன்று முதல் ஓர் அணியில் நின்று செயல்பட வேண்டும். புதிய கல்விக் கொள்கை எனும் மத யானையை வீழ்த்துவதற்கான போரில், முக்கியமான ஆயுதம்தான் நண்பர் மகேஷ் அவர்களின் இந்தப் புத்தகம். ஆகவே இந்தப் புத்தகம், தமிழ்நாட்டு மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என அனைவரின் கரங்களிலும் போய் சேர வேண்டும்.

### மாநில சுயாட்சியின் நாயகர்

இந்தச் சிறப்புக்குரிய புத்தகத்தை வெளியிட வந்திருக்கக்கூடிய மாநில சுயாட்சியின் நாயகர், நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வருக வருக என வரவேற்கிறேன். கழகத்தின் பொருளாளர் அவர்களையும், கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் அவர்களையும், ஆசிரியர் ஐயா அவர்களையும், அண்ணன் வைகோ அவர்களையும், அண்ணன் முத்தரசன் அவர்களையும், வந்திருக்கின்ற அமைச்சர் பெருமக்களையும், மாண்புமிகு மேயர், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அனைவரையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

### நிலைக்குழு தலைவர் திக்விஜய் சிங்

கல்விக்கான நாடாளுமன்ற நிலைக்குழுவின் தலைவர் திக்விஜய் சிங் அவர்களை வரவேற்கின்றேன். தொடர்ந்து தேசிய கல்விக்கொள்கைக்கு எதிராக தங்களது கருத்துக்களை பதிவுசெய்து வருவதற்கு எங்களது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி கோபால் கவுடா அவர்களை வரவேற்கின்றேன். தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராக போராடி வரும் எங்கள் அனைவருக்கும் தாங்கள் அளித்து வரும் தார்மீக ஆதரவுக்கும் ஊக்கத்திற்கும் எங்களது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டு அரசுப் பள்ளியில் தாய்மொழி வழி கல்வி கற்று நிலாவை, கை அருகே அழைத்து வந்த விஞ்ஞானத் தமிழர், இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் முன்னாள் இயக்குநர் பத்மஸ்ரீ மயில்சாமி அண்ணாதுரை அவர்களையும் வருக வருக என வரவேற்கிறோம்.

இங்கு வந்து இருக்கின்ற தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, கிளை நிர்வாகிகளையும் வரவேற்று மகிழ்கிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உறுப்பினர்களை வருக வருக என வரவேற்கிறேன். பள்ளிக்கல்வித்துறை உட்பட பல்வேறு துறைகளின் அதிகாரிகளையும் வருக வருக என வரவேற்கிறேன். பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களையும் வருக வருக என வரவேற்கிறேன். வந்திருக்கின்ற ஆசிரியர்கள், பெற்றோர்கள், மற்றவர்களையும் வரவேற்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக கலைஞரின் உயிரினும் மேலான கழக உடன்பிறப்புகள் உங்கள் அத்தனைபேரையும் வரவேற்று மகிழ்கிறேன்.

தமிழ்நாடு எத்தனையோ சூழ்ச்சிகளை, எதிர்த்துப் போராடி வென்றிருக்கிறது. அதேபோல் இந்த புதிய கல்விக் கொள்கை எனும் மத யானையை எதிர்த்தும், நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்.

நன்றி, வணக்கம்

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலைமுகவர்கள் (BLA 2) கலந்தாலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பார்வையாளர் பத்மப்ரியா ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்கள். அருகில் கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், பகுதிச் செயலாளர்கள் என்.சந்திரன், ப.குணாளன், நகரச் செயலாளர் டி.பாபு, ஒன்றிய செயலாளர்கள் ஏ. வந்தேமாதரம், ஜி.கே.ரவி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 87வது நாள்!

## துறைமுகம் தொகுதியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்!

*சென்னை, மே. 18- சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 87வது நாள் துறைமுகம் தொகுதி - இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்.*



*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 87 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (17.5.2025) துறைமுகம் தொகுதி: 1) வட்டம் 55 - எழுகிணறு பூங்கா அருகில், சென்னை 2) வட்டம் 57- நியு ஆந்திரபவன், ஆதியப்பன் தெரு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு “தமிழ் நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ் நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், எஸ்.முரளி, எஸ். இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம். தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம். விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.இ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா. பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன் ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*